உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 02 புதன்கிழமை (14.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 81

# குடாநாட்டில் விழிப்புக்குழுக்களை உடன் இயக்க ஏற்பாடு செய்யுமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவு

## பிரதம நீதியரசர் நேற்றுப் பணிப்புரை

யாழ்ப்பாணம், பெப்.13

குடாநாட்டில் கொள்ளைகளைத் தடுக்கும் நோக்கில் விழிப்புக் குழுக்களை உடன் இயக்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு பொலிஸ் மா அதிபருக்கு பிரதம நீதியரசர் சரத் என் சில்வா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகளில் கிராம சேவையாளர் பகுதிகளில் விழிப்புக்குழுக்கள் முதற்கட்டமாக அமைக்க ஆரம்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அதன் முதற்கட்டமாக மேற்படி பிரதேசங்களில் உருவாக்கப்படவுள்ள விழிப்புக் குழுக்களில் அங்கத்துவம் வகிக்கக்கூடிய உறுப்பினர்களின் விவரங்கள் கிராம சேவையாளர்கள் மூலம் சேகரிக்கப்பட்டன.

அவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலை அரச அதிபர் வடபிராந்திய பொலிஸ் அத்தியட்சகருக்கு அனுப்பியிருந்தார்.

இது தொடர்பான முன்னேற்ற அறிக்கையை யாழ். நீதிமன்றம் பிரதம நீதியரசருக்கு அனுப்பியிருந்தது.

பிரஸ்தாப அறிக்கையை அடுத்து - 'விழிப்புக்குழுக்கள் உடன் இயக்குவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும், அக்குழுக்களுக்கு பொலிஸார் உதவியை வழங்க வேண்டும் என்றும் பிரதம நீதியரசர் பொலிஸ்மா அதிபருக்கு நேற்று உத்தரவிட்டுள்ளார். (அ-1)

# மோதல்களைத் தவிர்த்தால் மட்டுமே தீர்வுக்கு அடித்தளம் அமைக்க முடியும்

## அமெரிக்கத் தூதரக அரசியல் அலுவலர் கருத்து

கொழும்பு, பெப்ரவரி 14

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மோதல்களைத் தவிர்த்தால் மட்டுமே, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான அடித்தளத்தை அமைக்கமுடியும் - என்றவாறு அமெரிக்கத் தரப்பில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் அலுவலர் செல்வி கெலானோ ரத்தோ ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியில், இக்கருத்தைத் தெரிவித்தார். (04ஆம் பக்கம் பார்க்க)

# சந்தர்ப்பவாத அரசியல் கூட்டணிகளுக்கு தமிழ்க் கூட்டமைப்பு முண்டுகொடுக்காது

## மங்கள அணியிடமிருந்து இதுவரை அழைப்பு வரவில்லை என்கிறார் சுரேஷ்



கொழும்பு, பெப்.14

மங்களசமரவீர குழுவினரதும், ஜே.வி.பியினரதும் தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அமைக்கப்படும் எதிர்க் கூட்டணிக்கு முண்டு கொடுத்து துணைபோக வேண்டிய அவசியம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை. அத்தகைய கூட்டணி எதற்கும் ஆதரவு கேட்டு அழைப்பு எதுவும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு இது வரை விடுக்கப்படவில்லை.

- இவ்வாறு நேற்று உதயனுக்குத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூன்று முக்கிய அமைச்சர்களின் பதவிகளை ஜனாதிபதி திடீரெனப் பிடுங்கியதை அடுத்து தென்னிலங்கை அரசியலில் அதிரடியான திருப்பங்கள் நிகழ்ந்துள்ளன. பதவி பறிக்கப்பட்ட மங்கள - அனுரா - சிறிபதி மூவர் அணி மஹிந்தவின் அரசுக்கு எதிராக வலுவான புதிய கூட்டணி ஒன்றை உருவாக்க முயற்சித்து வருவது பற்றியும், தமது அணிக்கு வலுச்சேர்ப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பு கிடைக்கும் என்று இந்த மூவர் அணி நம்புகின்றது என்றும் தெற்கில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. தெற்கின் இந்த அரசியல் களநிலைவரம் பற்றிக் கருத்துக்கேட்டபோதே சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்பொழுதும் அமைச்சுப் பதவிகளுக்காகவோ வேறு சலுகைகளுக்காகவோ அரசுக்கு முண்டுகொடுப்பதில்லை. நாம் இப்போதும் (04ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழர் பிரச்சினையில் தமிழக நடிகர்கள் அக்கறை

## கூட்டணியினரை வரவேற்று பேச்சு நடத்தினர்

சென்னை, பெப். 14

தமிழகத்துக்கு விஜயம் செய்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழக சினிமாத் திரையுலகக் கலைஞர்களால் வரவேற்கப்பட்டிருக்கின்றனர். நீண்ட மௌனத்துக்குப் பின்னர் தமிழகத் திரையுலகம் ஈழத் தமிழர் பிரச்சினையில் அக்கறை காட்டத் தொடங்கியிருப்பதை இது காட்டுவதாக ஈழத்தமிழ் அனுதாபிகள் கூறுகின்றனர்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். கே. சிவாஜிலிங்கம், எஸ். அரியநேத்திரன், எஸ். பத்மநாதன் (04ஆம் பக்கம் பார்க்க)

## தனுஷ்கோடியில் வெடிபொருள்கள் மீட்பு

இராமேஸ்வரம், பெப்.14

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த நூறு கிலோ வெடி பொருள்கள் தனுஷ்கோடிக் கடலில் இந்தியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன என தெரிவிக்கப்பட்டது.

தனுஷ்கோடி, இராமர் பாலத்துக்கு அருகில் தரித்துநின்ற இந்தியப்படகு ஒன்றில் இருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டன என்றும் -

அலுமினியக் கட்டிகள், இரும்பு வளையங்கள் போன்றவையும் அடங்கும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக இருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (அ-1)

## கிளாலி முன்னரங்கில் மூன்று படையினர் பலி!

யாழ்ப்பாணம், பெப். 14

கிளாலி முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர்.

திங்களன்று கிளாலியில் கரடியன்காடு என்னும் இடத்தில் படையினரின் முன்னரங்க நிலைகள்மீது விடுதலைப்புலிகள் ஷெல் தாக்குதல்களை ஆரம்பித்ததை அடுத்து படையினரும் பதிலுக்குப் புலிகளின் நிலைகளை நோக்கி மோட்டார் தாக்குதல்களை நடத்தினர் என்று படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

திங்கள் இரவும், நேற்றுக் காலையும் இப்பகுதியில் பலத்த ஷெல் சத்தங்கள் கேட்டன. இதனால் குடாநாடு அதிர்ந்தது. (ஐ)

## பருத்தித்துறைக் கடலில் வேட்டுச் சத்தங்கள்

நெல்லியடி, பெப்.14

பருத்தித்துறைக் கடற்பகுதியில் நேற்று மாலை 5 மணி தொடக்கம் பொழுது சாய்ந்து இருள் கவிந்த பின்னரும் வேட்டுச்சத்தங்கள் கேட்டன.

இருதரப்பு மோதலா அல்லது படையினரின் ஒத்திகை நடவடிக்கையா என்பதை நேற்று இரவு வரை உறுதி செய்யமுடியவில்லை.

இதேவேளை - நேற்று மாலை 5 மணி முதல் ஊரடங்கு நடைமுறைக்கு வருவதாக பரவிய தகவல் காரணமாக ஐந்து மணியுடன் வடமராட்சிப் பகுதி அடங்கியது. மக்கள் நடமாட்டம் இன்றி வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. (அ-1-115)

## மூவர் அணியின் முக்கிய முடிவு நாளை பகிரங்கமாக அறிவிப்பு

கொழும்பு, பெப்.14

அமைச்சுப்பதவிகள் பறிக்கப்பட்ட மங்கள சமரவீர, அனுரா பண்டாரநாயக்க, சிறிபதி சூரியாராச்சி ஆகியோர் தமது அடுத்தகட்ட நடவடிக்கைகளை நாளை வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளனர்.

கடந்த இரண்டு தினங்களாக மங்கள சமரவீரவின் கொழும்பு இல்லத்தில் தொடர்ச்சியாக நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னரே வியாழக்கிழமை தமது நிலைப்பாட்டையும் அடுத்தகட்ட நடவடிக்கைகளையும் பகிரங்கமாக அறிவிப்பதென மூவரும் தீர்மானித்துள்ளனர். (ஐ)

# கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.14

பாடசாலைகளுக்குச் சென்று கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தமிழ் மாணவர் ஒன்றியம் மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

காணாமற்போன வடமராட்சிப் பாடசாலை மாணவர்களை விடுவிக்கக் கோரி குடாநாடு தழுவிய ரீதியில் மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அதனைக் கைவிட்டு கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் கோரியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடத்தப்பட்ட தமது சக மாணவர்களை விடுவிக்கக் கோரியும் மாணவர்கள் மீதான இராணுவ வன்முறைகளை நிறுத்தக் கோரியும் குடாநாட்டின் சில பாகங்களில் ஆரம்பிக்கப்பட்ட வகுப்பு புறக்கணிப்புப் போராட்டம் தொடர்ந்து யாழ். குடாநாடெங்கும் பரவியிருந்தது.

ஆனால் அரசு மாணவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாது தனது இயந்திரத்தினை ஏவி பெற்றோர்கள், கல்வி அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்து வீடு வீடாகச் சென்று மாணவர்களுக்கு கொலை (04ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரைகளை 19ஆம் திகதிமுதல் ஆரம்பிக்க தீர்மானம்

கொழும்பு, பெப்.14

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 19ஆம் திகதி முதல் விரிவுரைகள் ஆரம்பிக்கப்படும். நேற்று முன்தினம் பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்பட்டபோதும் 90 வீதமான மாணவர்களே வருகை தந்துள்ளனர். இது வரை விடுதியில் தங்கிப்படித்த மாணவர்களும், வெளியிடங்களிலே தங்கிப் படித்த மாணவர்களும் இப்போதும் வெளியிடங்களிலேயே தங்கிவருகின்றனர். இதனால் பல்கலைக்கழக விடுதிகள் மாணவரின்றி மூடிக்கிடக்கின்றன.

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் ரவீந்திரநாத் கடத்தப்பட்டமை மற்றும் தொடர்ந்து பல்கலைக்கழகத்தின் முன்பாக இடம்பெற்ற கிளைமோர் குண்டுவெடிப்பு ஆகிய காரணங்களால் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் முற்றாகச் சீர்குலைந்துவிட்டன. இதனால் இவ்வாண்டு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று பல்கலைக்கழக பதில்துணைவேந்தர் பத்மநாதன் தலைமையில் பல்கலைக்கழக நிர்வாகக்குழு கூடி விரிவுரைகளுக்கான நேர அட்டவணையை தயாரித்தது. (ஐ)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு
## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிக்கோட்)
## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
# வெற்றிடங்களை நிரப்புதல்

திருகோணமலை, வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட முகாமைத்துவ காரியாலயத்திலும் மாவட்ட முகாமைத்துவ காரியாலயங்களிலும் கீழ்க்காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொது நிபந்தனைகள்**

26.12.2000 ஆம் திகதிய முகாமைத்துவ சுற்றுநிருபம் இலக்கம் 10 இற்கு அமைவாக நியமனங்கள் திருப்திகரமான சேவை அடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கக்கூடிய ஒப்பந்த அடிப்படையிலானதாகும்.

அரசாங்க சேவையில் /அரசாங்க ஸ்தாபனங்களில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு நிதி நிறுவனத்தினால் நிதிப்படுத்தப்படும் ஒரு திட்ட முகாமைத்துவப் பிரிவுக்கு பின்வரும் முறையில் நியமனம் செய்யப்படுவர்.

அ) திட்ட முகாமைத்துவப் பிரிவுக்கு விடுவித்தல்/ அல்லது இணைத்தல்
ஆ) சம்பளமற்ற விடுதலையில்

**வயதெல்லை**

55 வயதிற்கு குறைந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித்தகைமை, தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழில் விவரங்கள், முன்னைய அனுபவம், இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுய தரவுகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினை அவர்களாகத் தயாரிக்க வேண்டும். விண்ணப்பம் பதிவுப் தபால் மூலம் 26.02.2007 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் *திட்டப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD) 55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலை* என்ற முகவரியில் கிடைக்க வேண்டும். அரச திணைக்களம் / அரச கூட்டுத்தாபனங்கள் / சபைகள் என்பனவற்றில் சேவையிலிருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்கவேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

தகைமை அடிப்படையில் தேர்தெடுக்கப்பட்ட குறுகிய அட்டவணையிலிருந்து நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்தெரிவு செய்யப்படுவர்.

### தொழில்நுட்பப் பணிப்பாளர் பதவி- 01 வெற்றிடம் (திட்ட முகாமைத்துவ காரியாலயம்)

**கடமைகளும் பொறுப்புகளும்**

கருத்திட்ட அமுலாக்கும் திட்டத்திலும் கடன் ஒப்பந்தத்திலும் விவரிக்கப்பட்ட திட்டத்தினைத் தயாரிப்பதிலும் கையாளுவதிலும் செயற்படுத்துவதிலும் தேவையான விசேட தொழில்நுட்பங்களை வழங்க வேண்டும்.

**தேவையான தகைமையும் அனுபவமும்**

குறைந்தது 15 வருட அனுபவத்தினைக் கொண்ட பட்டய எந்திரி

**தொழில்சார் திறமைகள்**

* திட்டப் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதோடு திட்டதிற்கு தேவையான தொழில்நுட்ப சேவையை வழங்கும் ஆற்றல்.
* திட்ட முகாமைத்துவப் பிரிவில் கிடைக்கும் பலவித திட்டங்களை தொழில்நுட்ப ரீதியாகக் கணிப்பிடும் ஆற்றல்.
* சேவைகளையும் வழங்கல்களையும் பொருள்களையும் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படையான அறிவைக் கொண்டிருப்பதோடு திட்டத்தினை சிறப்பான துறையில் செயலாற்ற கண்காணிக்கும் ஆற்றல்.
* தனக்குரிய வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான ஆற்றல்.
* கணனி அறிவு பெற்றிருத்தல்.
* எழுத்து மூலமாகவும் வாய் மூலமாகவும் திறமையாகத் தொடர்பு கொள்ளும் ஆற்றல்.
* ஆங்கிலத்தில் எழுதவும் கதைப்பதற்குமான உயர் மட்டத் தேர்ச்சி.
* கேள்விகளைக் கணிப்பீடு செய்வதிலும் கொள்வனவு நடைமுறைகளிலும் அறிவினைக்கொண்டிருத்தல்.

**சம்பளம்**

2000.12.26 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல.10 இன் 05ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படலாம்.

### மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் பதவி – வெற்றிடங்கள் 05
### (மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம்)

**கடமைகளும் பொறுப்புகளும்**

* சமூக அபிவிருத்தித் திட்டங்களையும், உபதிட்டங்களையும் திட்டமிடுதலும் செயற்படுத்துதலும்.
* மாவட்ட மட்டத்தில் காரியாலயத்தை ஸ்தாபித்தலிலும் நடைமுறைப் படுத்துவதிலும் அரசாங்க அதிபருக்கு உதவியாயிருத்தல்
* மாவட்ட மட்டத்தில் திட்டங்களை திட்டமிடுதலிலும் செயற்படுத்துவதிலும் கண்காணித்தலிலும் மீளாய்வு செய்வதிலும் அரசாங்க அதிபருக்கு உதவியாயிருத்தல்.
* திட்ட நடவடிக்கைகளைத் திட்டமிடுதலிலும் செயற்படுத்துவதிலும் கண்காணித்தலிலும் மீளாய்வு செய்வதிலும் திட்டப்பணிப்பாளருக்கு உதவியாயிருத்தல்.

**தேவையான தகைமையும் அனுபவமும்**

பொறியியல், விஞ்ஞானம், சட்டம், பொருளியல், வர்த்தகம், விவசாயம்,வியாபார நிர்வாகம்/முகாமைத்துவம், கணக்கியல் அல்லது வேறு ஏதாவது துறையில் பட்டமொன்றுடன் வெளிநாட்டு நிதி நிறுவனங்களினால் நிதியிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 05 வருடங்களுடன் 08 வருட அனுபவம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

அல்லது

குறிப்பிட்ட துறையில் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு தகைமை (கலைமாணி/ டிப்ளோமா) அல்லது குறிப்பிட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் கூட்டு அங்கத்துவத்துடன் வெளிநாட்டு நிதி முகவரகங்களில் நிதியிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் 05 வருடங்கள் உட்பட 8 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

நாடளாவிய சேவையின் II/I வகுப்பிலுள்ளோர் நியமனத்திற்காகக் கவனத்தில் கொள்ளப்படுவர். நாடளாவிய சேவையின் II/I தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து வகுப்பு II/II இல் உள்ளோர் கவனத்தில் கொள்ளப்படுவர்.

ஆங்கிலத்தில் எழுதுவதிலும் கதைப்பதிலும் கூடிய தேர்ச்சி.
கணனி அறிவு.

### திட்ட எந்திரி பதவி – வெற்றிடங்கள் 05
### (திருகோணமலை திட்டமுகாமைத்துவப் பிரிவு, அம்பாறை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு)

**கல்வித் தகைமைகள்**

II/I குடிசார் விஞ்ஞான இளமாணிப் பட்டம்

**தொழில்சார் தகைமைகள்**

குடிசார் வேலைகளை மேற்பார்வையிடுவதிலும் நடைமுறைப் படுத்துவதிலும் அனுபவம். தகைமைவாய்ந்த II/I ஆம் வகுப்பு குடிசார் விஞ்ஞான இளமாணி விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் II/II ஆம் வகுப்பு குடிசார் இளமாணிகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள் ளப்படும். ஆங்கிலத்தில் எழுதுவதிலும் கதைப்பதிலும் ஆற்றல்.

**சம்பளம்**

அரசாங்க சேவையில் இதுபோன்ற பதவிக்குரித்தான சம்பளத்துடன் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும் அனுபவத்திற்கமைவாக 26.12.2000 ஆம் திகதி இல.10 முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரமாணம் 5 இற்கு அமைவாக அப்பதவிக்கான சம்பளத்தின் 50 வீதத்திற்கு மேற்படாதபடி ஒன்று வழங்கப்படும்.

**த.லங்காநேசன்,**
**திட்டப்பணிப்பாளர் ,**
**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிக்கோட்), திருகோணமலை.**
(சி/52017)

---

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்
Jaffna Head office: No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc.
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:-19/02/2007- 09.00 AM

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
கு.ரவீந்திரன்
அவர்களின் பாசமிகு தந்தை

# தா.மு. குண்டுமணி

(ஆர்மோனிய வித்துவான்)

அவர்கள் 15.01.2007 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு இந்நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் சமூகமும் மாணவர்களும்,**
**யா/புத்தூர் ஸ்ரீ பஞ்ஞசீக வித்தியாலயம்,**
**புத்தூர்.**
(57067)

---

## 8ஆம் ஆண்டு நினைவு நாள்



கர்த்தருக்குள் மரித்த
# பண்டாரி கந்தசாமி (வில்லியம்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26.07.1947 | 14.02.1999 |

நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்ந்து அவரை நம்புவாள்
செம்மையான இருதயமுள்ளவர்கள் யாவரும்
மேன்மை பாராட்டுவார்கள்.
*(சங்கீதம்-64-10)*

அன்போடு நினைவுகூரும்:
மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

மணற்பகுதி,
புத்தூர். (57984)

தகவல்:
பிரதீபன்.

---

## மரண அறிவித்தல்

# கனகரத்தினம் அன்னபூரணம்



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் 153, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் அன்னபூரணம் 12.02.2007 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் பா.விஜயலக்சுமி (பிரான்ஸ்), விஜயரட்ணம் (இந்தியா),மயில்வாகனம் (கொழும்பு), இராசரட்ணம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற ஆ.பாலசுப்பிரமணியம், வி.விமலாதேவி, ம.கலாவதி, இ.இந்திராணி ஆகியோரின் அன்புமாமியும் ஜெகதீசன், புஸ்பராணி ஆகியோரின் பேர்த்தியும், சுஜீந்திரன், தவறஜனி, கலாரஜனி, குலேந்திரன், ஜெயமாலினி, ஜெயகௌரி, ரமணன் ஆகியோரின் பூட்டியும் கிர்ஷிகன், ஜதீசன், திவாத் ஹர்சன் ஆகியோரின் கொப்பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2007) புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள

தகவல்:
190, அப்பு[illegible] வீதி, யாழ்ப்பாணம். (57985)
ஜெ.புஸ்பராணி ([illegible]).

---

**COMPUTER COURSES**
இவ்வாரத்தில் ஆரம்பம்!
* Diploma in Auto CAD
* Diploma in Accounting Packages
* Diploma in Visual Basic (VB)
* Diploma in Java
* Diploma in Computer Hardware
* Diploma in Internet & E-Mail

மேலதிக விபரங்களுக்கு நேரில்!
**CB Computer Academy**
Station Road, Kondavil. ☎:- 021-4590291

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
### வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பரீட்சைகள் -2006

1. வணிக முதற்தேர்வு 2006
(2003/2004 மற்றும் 2004/2005 கல்வியாண்டுகளுக்கான பதிவை மேற்கொண்டவர்களும் மீள் பரீட்சார்த்திகளும்)
2. கலை முதற்தேர்வு 2006
(2003/2004 மற்றும் 2004/2005 கல்வியாண்டுகளுக்கான பதிவை மேற்கொண்டவர்களும் மீள் பரீட்சார்த்திகளும்)
3. பொது மற்றும் சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி I 2006
(2001/2002 மற்றும் 2002/2003 கல்வியாண்டுகளுக்கான பதிவை மேற்கொண்டவர்களும் மீள் பரீட்சார்த்திகளும்)
4. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி தேர்வு பகுதி II - 2006
(2000/2001 கல்வியாண்டுக்கான பதிவை மேற்கொண்டவர்களும் மீள் பரீட்சார்த்திகளும்)
5. சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி III - 2006
(1999/2000 கல்வியாண்டுக்கான பதிவை மேற்கொண்டவர்களும் மீள் பரீட்சார்த்திகளும்)
6. நுண்கலைமாணி முதலாம் வருடத்தேர்வு (நடனம் /சங்கீதம்) 2006
(2001/2002 மற்றும் 2002/2003 கல்வியாண்டுகளுக்கான பதிவை மேற்கொண்டவர்களும் மீள் பரீட்சார்த்திகளும்)
7. நுண்கலைமாணி 2ஆம், 3ஆம், 4ஆம் வருடத் தேர்வு (நடனம்/சங்கீதம்) 2006
(1998/1999, 1999/2000 மற்றும் 2000/2001 கல்வியாண்டுகளுக்கான பதிவை மேற்கொண்டவர்களும் மீள் பரீட்சார்த்திகளும்)

மேற்படி பரீட்சைகளுக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

வணிக முதற் தேர்வு மற்றும் கலை முதற் தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 02.03.2007. ஏனைய தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 30.03.2007 வரை ஆகும். (முடிவு திகதிக்கு பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்று கொள்ளப்படமாட்டா)

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/- இற்கான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூபா 20/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 ×20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் *உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

*புதிய பரீட்சைக் கட்டண விவரம்:*

முதல் முறை பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான கட்டணம் ரூபா 1600/-

மீள் பரீட்சார்த்திகளாயின் ஒவ்வொரு பாட அலகிற்கும் செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 200/-

**பதிவாளர்,**
**12.02.2007**
(சி-52024)

---

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
Head Office : 15, Sirambiyadi Lane, Off Stanly Rd, Jaffna.
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna.
TP No : 021 222 8250 , 0777 222 422

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007**
**80% OFF**

| பாட நெறிகள் | | | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | [illegible] | 1,650 |
| Honours Diploma in Computer Science | - 5மாதம் | [illegible] | 2,100 |
| Diploma in Web Page Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | [illegible] | 1,450 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| Accounting Package | - 3 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| MS Office | - 3 மாதம் | [illegible] | 1,000 |

**50% Off**
**Advances Courses**
Diploma in Video Editing ~~[illegible]~~ 3250
Diploma in Multimedia ~~[illegible]~~ 2750

வகுப்புக்கள் ஆரம்பம் :-
Batch I - 17/02/2007
Batch II - 18/02/2007
Batch III - 21/02/2007
Batch IV - 23/02/2007

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 3837

## அராஜகங்களுக்கு தலையசைப்பதால் சமூக அநீதியை ஒழிக்க முடியாது

'பாலுக்கும் காவலன்; பூனைக்கும் தோழன்' என்பது போல இரட்டை வேடம் போடுகிறது மலையக மக்கள் முன்னணி என்று குற்றம் சாட்டுகிறது மேலக மக்கள் முன்னணி.

இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு இந்தக் கட்சி இழைக்கின்ற பெரிய கபடத்தனமான துரோகம் இது என்றும் சுட்டிக்காட்டுகின்றது மேலக மக்கள் முன்னணி.

தென்னிலங்கையில் இன்று வகைதொகையின்றித் தமிழர்கள் கைதுசெய்யப்படுகின்றார்கள். அவசரகாலச்சட்ட விதிகளின் கீழான அதிகாரங்களைப் பயன்படுத்தியே பொலிஸாரும் முப்படையினரும் இந்த மனித உரிமை மீறல் போக்கைக் கட்டுப்பாடு ஏதுமின்றிப் புரிகின்றனர் என்பது வெள்ளிடை மலை; உள்ளங்கை நெல்லிக்கனி.

அரசில் இணைந்து அமைச்சுப் பதவி பெற்ற காரணத்தால் - நாவிழந்த காரணத்தால் - அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணைக்கு நாடாளுமன்றில் ஆதரவு தெரிவித்து வாக்களிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற - செஞ்சோற்றுக் கடன் தீர்க்கின்ற - கடப்பாட்டில் சிக்கியுள்ளது மலையக மக்கள் முன்னணி.

அதனால், தமிழர்கள் கட்டுமட்டின்றி - நீதி, நியாயமின்றி - கைதுசெய்யப்படுவதற்கு வகை செய்கின்ற அவசரகால விதிகளுக்கு நாடாளுமன்றில் ஆதரவு வழங்கும் கட்டாயம் அதற்கு. மறுபுறத்தில் தமிழ் உறவுகள் நீதி, நியாயமின்றி அநியாயமாகக் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, காணாமற் போய், அல்லாடும் பேரவலத்தைச் சகிக்க முடியாத மனத்துடிப்பு. இவை இரண்டுக்கும் நடுவில் ஊசலாடியபடி தந்திரோபாய அரசியலை நடத்த முயல்கிறது மலையக மக்கள் முன்னணி.

ஆட்கடத்தலும், காணாமற் போதலும், கடத்தி வைத்துக் கப்பம் பெறுதலும், படுகொலை செய்யப்படுவதும் தென்னிலங்கையில் மட்டும் தமிழர்களுக்கு எதிராக இன்று மேற்கொள்ளப்படும் விடயங்களல்ல. அரசுப்படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பகுதி எங்கும் இந்த அராஜகங்கள் - மனித உரிமைகளை மோசமாக மீறும் அவலங்கள் - பெருமளவில் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

நாட்டில் மோசமான யுத்த சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் முப்படையினரும், பொலிஸாரும் தாம் 'பயங்கரவாதம்' எனக் கருதும் செயற்பாட்டுக்கு எதிராக - அதை அடக்குவதற்காக - எடுக்கும் நடவடிக்கைகளின் வெளிப்பாடுதான் இவை என்றால் அதையாவது சற்றும் புரிந்துகொள்ளலாம்.

ஆனால், இது அப்படியல்ல. அதையும் தாண்டி, ஒரு மொழிபேசும் மக்களுக்கு எதிராக - அவர்கள் மாற்று இனத்தவர்கள் என்பதற்காக - அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அரச பயங்கரவாதமாக அல்லவா இது வெளிப்படுகின்றது? அதுவும் அரசுத் தலைமையின் ஆசீர்வாதத்தோடும், தலையசைப்போடும் மேற்கொள்ளப்படும் சீருடை அராஜகமாக இது செயற்படுத்தப்படுகின்றது என்பதும் அப்பட்டமாகப் புலனாகின்றது.

ஆனால், உண்மை அப்படியிருக்க -

இந்த நாட்டில் அவசரகாலச்சட்டம் பக்கச் சார்பற்ற முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு, இங்கு சட்டத்தின் ஆட்சி நிலவுகின்றது என்ற ஒரு மாயத் தோற்றத்தைக் காட்ட முயலும் அரசின் முயற்சிக்கு மலையக மக்கள் முன்னணி துணைபோகின்றது என்ற யதார்த்தத்தை மேலக மக்கள் முன்னணி வெளிப்படையாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

முன்னர் வடக்கே சென்று அங்குள்ள தமிழர்கள் மத்தியில் உரையாற்றும்போது, இன்று மலையகத் தமிழர்களும் தலைவர் பிரபாகரன் பின்னால் அணி திரளத் தயாராகி விட்டனர் என்று கூப்பாடு போட்டு, கூட்டத்தில் கைதட்டல் வாங்கிய மலையக மக்கள் முன்னணியின் தலைவர்கள், இப்போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பின்னால் அணி திரண்டு 'மஹிந்த சிந்தனை'யின்படி சமூக அநீதியை ஒழிக்கப் புறப்பட்டுவிட்டார்கள்.

இங்கு, ஓர் இனத்துக்கு எதிராக அவசரகால விதிகள் மற்றும் யுத்தக் கெடுபிடிகள் மூலம் சமூக அநீதி இழைக்கப்பட்டுக் கொண்டிருக்க, அந்த அவசரகால விதிகளுக்கு ஆதரவு தெரிவித்துக்கொண்டே சமூக அநீதியை எங்ஙனம் ஒழிக்கமுடியும் என்ற கேள்வி இயல்பாகவே மக்கள் மனதில் எழுகின்றது.

இன்று தமிழர் தாயகத்திலும், தென்னிலங்கையிலும் தமிழ் மக்களுக்கு எதிரான கெடுபிடிகள், கைதுகள், தடுத்து வைப்புகள், காணாமற்போதல் என்பன வெறும் சீருடை நடவடிக்கைகள் என்பதற்கு அப்பால் ஆட்சித்தலைமையின் ஆசீர்வாதத்தோடு நடைபெறும் அராஜகங்கள் - அத்துமீறல்கள் - அல்ல என்று இப்போது அரசில் ஒட்டிக்கொண்டிருக்கும் மலையக மக்கள் முன்னணியினரால் தமது மனதைத் தொட்டு வெளிப்படுத்த முடியுமா ? முடியாது.

இந்த அரசின் ஆட்சி நிர்வாகத்தின் கீழ் கடத்திக் கப்பம் பறிக்கும் அதிகார அராஜகத்தில் தங்கள் கட்சியின் முக்கிய - மூத்த - உறுப்பினர் ஒருவரையே நேரடியாக இழந்து தடுமாறும் கட்சி அது.

கொழும்பில் - தலைநகரில் - இவ்வளவு பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியில் ஆயுதங்கள் சகிதம் வாகனங்களில் வந்து தமிழர்களைக் கேட்டுக் கேள்வியின்றிக் கடத்தி, பணயம் வைத்து, கப்பம் கேட்டு, தவணை தவணையாகப் பெரும் தொகைப் பணம் சுளையாக அறவிட்டுவிட்ட பின்னர் சாவதானமாகச் செல்லும் அராஜகம் சர்வ சாதாரணமாக நடந்தேறுகின்றது.

ஆட்சித் தலைமையின் அங்கீகாரமும், கண்டும் காணாமலும் விடுவதற்கான தலையசைப்பும் இன்றி இடம்பெறும் கொடூரங்கள் அல்ல இவை என்பது தமிழ்த் தலைவர்களுக்குத் தெரியாத விடயமல்ல.

அவ்வாறு புரிந்திருந்தும் இந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலவுகின்றது எனக் காட்டுமாற்போல மலையக மக்கள் முன்னணித் தலைவர்கள் நடந்துகொள்கின்றமை மக்களை முட்டாளாக்கும் அரசியல் என்றும், இந்நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு இந்தக் கட்சி இழைக்கின்ற பெரும் கபடத்தனமான துரோகம் என்றும் மேலக மக்கள் முன்னணி சீறுவதில் அர்த்தமும், நியாயமும் நிறையவே உண்டு என்றே படுகின்றது.

'சமத்துவம் மிக்கதோர் சமூகத்தை நோக்கி.....' என்பதுதான் மலையக மக்கள் முன்னணித் தலைவர், 'மஹிந்த சிந்தனை' யின் கீழ் பொறுப்பேற்றுள்ள - புதிய நோக்குடைய புதியதோர் அமைச்சு என அவரது தரப்பில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள - அமைச்சின் நோக்கமும் இலக்குமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் துன்ப, துயரங்களையும், பேரவலங்களையும் அம்பலப்படுத்தி, அவற்றுக்கு எதிராக - ஆதரவாக அல்ல - செயற்படுவதே சமத்துவம் மிக்கதொரு சமூகத்தை நோக்கிச் செல்லும் ஒரே மார்க்கம் என்பதை சம்பந்தப்பட்டோருக்குக் கூறிவைக்கிறோம்.

# 273 தடுப்புக்காவல் கைதிகளை செஞ்சிலுவை அதிகாரிகள் சந்தித்தனர்

### வாராந்த அறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.14

பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 273 பேரை கடந்த இரு வாரங்களில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு சந்தித்துள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தனது செயற்பாடுகள் குறித்து வெளியிட்ட செய்தி அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்களைச் சென்று சந்திக்கும் பணியை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தொடர்ந்து செய்து வருகின்றது. கடந்த இரு வாரங்களில் குழுவின் பிரதிநிதிகள் 29 இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை 30 தடவைகள் சென்று சந்தித்துள்ளனர். இதன்போது 273 தடுப்புக் காவல் கைதிகளிடம் தனிப்பட்ட நேர்காணலை நடத்தியதுடன் பதிவுகளும் செய்யப்பட்டன.

கடந்த இரு வாரங்களில் ஓமந்தை, உயிளங்குளம் பாதைகளினூடாக 19 ஆயிரம் மக்கள் இலகுவாகப் பயணம் செய்வதற்கு இக் குழு பக்கச்சார்பற்ற இடைநிலையராகப் பணியாற்றியுள்ளது.

இதே காலப் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட 40 கடத்தல் சம்பவங்களையும் நாடு முழுவதும் 100 கைதுகள் மேற்கொள்ளப்பட்டதையும் செஞ்சிலுவை சர்வதேசக் குழு பதிவு செய்துள்ளது.

#### அவசர நோயாளர் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சுகாதார அதிகாரிகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைக் குழு தொடர்ந்து கைகொடுத்து உதவி வருகின்றது. கடந்த இரண்டு வாரங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து 47 நோயாளர்கள் அவர்களது நலனைக் கவனிப்போர் அவர்களது மருத்துவர்கள் ஆகியோரின் துணையுடன் கொழும்பில் உள்ள மருத்துவமனைகளுக்கு மேலதிக சிகிச்சைகளுக்காகவும் பல்வேறு மருத்துவ ஆய்வுகளுக்காகவும் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினால் அமர்த்தப்பட்ட விமானத்தில் கூட்டிச் செல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆய்வு கூட பரிசோதனைக்கான மாதிரிப் பொருள்கள் கொழும்பிற்கு கொண்டு வரப்பட்டன. யாழ். போதனா மருத்துவமனைக்கும் மருத்துக்கும் சுகாதார சேவைக்குமாக சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருள்களும் எடுத்து வரப்படுகின்றன. காயங்களுக்கு கட்டுப் போடும் பொருள்கள், மருந்துகள் என்பன கிளிநொச்சி மாவட்டத்தில் மருத்துவ மனைகளுக்கு வழங்கப்பட்டன.

ஜனவரி 2ஆம் திகதி படகுத்துறை கிராமத்தில் காயமடைந்த நோயாளர்கள் இந்த மருத்துவ மனைக்கு வந்து சேர ஆரம்பித்ததால் மருந்துகளும் அனுப்பப் படுகின்றன. 21 போராளிகளின் உடல்களையும் செஞ்சிலுவை சர்வதேசக் குழு எடுத்துச் சென்று கையளித்தது. (அ-202)

## தெல்லிப்பழை மீள்குடியமர்வு: தென்மராட்சியில் விசாரணை

தென்மராட்சி,பெப்.14

தெல்லிப்பழை பிரதேசத்தில் மீளக் குடியமர விரும்பும் தென்மராட்சி பிரதேசத்தில் தங்கியுள்ள வலி - வடக்குப் பிரதேச மக்களுக்கான விசாரணைகள் பிரதேச செயலகத்தில் நடைபெற்று வருகின்றன.

விசாரணையில் இதுவரை கலந்து கொள்ளாதவர்கள் நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் பிரதேச செயலகத்திற்கு வருகை தருமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.

## சிறுவனை ஏமாற்றி நகைகள் அபகரிப்பு

தென்மராட்சி,பெப்.14

12 வயதுச் சிறுவனை ஏமாற்றி வீட்டிலிருந்து 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் சாவகச்சேரி குசவமடம் பகுதியில் இடம்பெற்றது.

கட்டம் கட்டமாக சிறுவனைக்கு பணத்தினைக் கொடுத்து வீட்டிலிருந்த நகைகள் அபகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக சிறுவனையும் நகைகள் வாங்கிய நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளதாக அறியவந்தது.

## யாழ். ப.நோ.கூ. சங்கத் தலைவராக நல்லூர் உதவிப் பிரதேச செயலர் நியமனம்

### இயக்குநர் சபையும் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.14

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக நல்லூர் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் வி.எஸ்.எஸ். செல்வராசா அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். ப.நோ.கூ. சங்கத்தின் தலைவர் எஸ்.ரி. கணநாதன் இம்மாதம் முதலாம் திகதி இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்தே அவரின் இடத்துக்கு வி.எஸ்.எஸ். செல்வராசா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ். அரச அதிபர் ஆகியோர் யாழ். ப.நோ.கூ. சங்கத்துக்குப் புதிய இயக்குநர் சபை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.

இந்த இயக்குநர் சபையில் தலைவராக வி.எஸ்.எஸ். செல்வராஜாவும், உறுப்பினர்களாக யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். கணேஷ், சமூக சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த எஸ். கனகராசா ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ-8)

## அத்தியாவசிய சேவைகள் நாயகம் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி. திவாரட்ண தலைமையிலான அரச உயர்மட்டக்குழு இன்று புதன்கிழமை யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளது.

சம்பந்தப்பட்ட குழுவினர் இன்று காலை 9 மணிக்கு யாழ். பொது நூலகத்தில் திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களுடன் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் குடாநாட்டு மக்களின் அத்தியாவசிய சேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்படும் என்று அறியவந்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அரச அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-1-8)

## ஊரடங்கு நேரத்தில் இருபாலையில் 50 பேர் கைதாகி விடுவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.14

இருபாலைப் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில், ஊரடங்கு நடைமுறையில் இருந்த வேளை, வீதியில் நடமாடிய ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

அந்தப் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானம் ஒன்றில் ஊரடங்கு நடைமுறைக்கு வந்த பின்னரும் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள், வீதியால் சென்ற இளம் பெண்கள் உட்படப் பலர் படையினரால் கைது செய்யப்பட்டனர். எனினும் இரவு 7.30 மணியளவில் அவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (அ-1)

### நாளை

மாசி- 03
வியாழக்கிழமை
15.02.2007
திதி: திரயோதசி
பின்னிரவு : 01.52
நட்சத்திரம் : உத்தராடம்
பின்னிரவு : 04.00
சுபநேரம் : 08.03 - 09.33
ராகுகாலம் : 02.03 - 03.33

## உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கு

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் நடத்தப்படும் நிதி முகாமைத்துவப் பாடப்பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கு நிறுவனத்தின் ஏற்பாட்டில் வழிகாட்டல் விரிவுரைகள் நடத்தப்படவுள்ளன.

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது பெயர் விவரங்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு நிறுவனத்தின் பதிவாளர் கேட்டுள்ளார். (1-202)

## வாழ்நாள் பேராசிரியராக பாலசுந்தரம்பிள்ளை நியமனம்

யாழ். பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியராக முன்னாள் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். பல்கலைக்கழக சேவையில் 41 வருடங்களைப்பூர்த்திசெய்த இவர் 26 வருடங்கள் பேராசிரியராகவும் 7 வருடங்கள் கலைப்பீடாதிபதியாகவும் 7 வருடங்கள் துணைவேந்தராகவும் பணியாற்றியுள்ளார்.

வாழ் நாள் பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ள பொ. பாலசுந்தரம்பிள்ளை யாழ். பல்கலைக் கழகத்தில் விரிவுரைகளை பகுதிநேர [illegible] (அ-1)

## சிவராத்திரியன்று கீரிமலையில் பக்தர்கள் தங்க அனுமதி

யாழ்ப்பாணம்,பெப்.14

கீரிமலை சிவன் தேவஸ்தானத்தில் சிவராத்திரி தினத்தன்று இரவு 5 மணிக்குப் பின் பக்தர்கள் தங்கி விரதம் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய ஆதீனகர்த்தா கு.நகுலேஸ்வரக்குருக்கள் உதயனுக்குத் தெரிவித்தார்.

அன்றிரவு ஆலயத்தில் பக்தர்கள் தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் -

இரவில் விசேட பூசைகளும் பண்ணிசை மற்றும் பக்திப்பாடல் அரங்குகளும் இடம்பெறவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மறுநாள் காலை தீர்த்த உற்சவத்தை அடுத்து தாகசாந்தி மற்றும் அன்னதானம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-1)

## இலங்கை வங்கியின் புலமைப்பரிசில்

2006ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 172 புள்ளிகளையோ அதற்கு அதிகமாகவோ அல்லது மாவட்ட மட்டத்தில் முதல் பத்து இடங்களுக்குள் ஓரிடத்தையோ பெற்ற மாணவர்களுக்கு இலங்கை வங்கி புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளது.

இலங்கை வங்கியின் சிறுவர் சேமிப்புக் கணக்கில் 12.08.2006 ஆம் திகதி முதல் 2 ஆயிரத்து 500 ரூபாவை ஆகக் குறைந்த நிலுவையாக வைத்திருக்கும் மேற்படி தகைமையுடைய சிறார்களுக்கே இந்தப் புலமைப்பரிசில் வழங்கப்படும்.

தகைமையுடைய சிறுவர்கள் தாங்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கிக் கிளைக்குச் சென்று மேலதிக விவரங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் கேட்டுள்ளார். (202)

### குடாநாட்டின் குட்டிச் செய்திகள் - யாழ்ப்பாணம்

## நேர்முக விசாரணை நாளை

யாழ்ப்பாணம்,பெப்.14

வெளிமாவட்ட ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்களுக்கு இன்று நடைபெறவிருந்த நேர்முகவிசாரணை நாளையே இடம்பெறும் என்று பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார். (1-4-75)

## தென்மராட்சியில் குடும்ப அட்டை மீளாய்வு

தென்மராட்சி,பெப்.14

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளுக்கான உணவுப் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு நாளை நடைபெறும்.

மந்துவில் கிழக்கு (ஜே/345), மந்துவில் மேற்கு (ஜே/346), இடைக்குறிச்சி (ஜே/341), வரணி இயற்றாலை (ஜே/343), மிருசுவில் வடக்கு (ஜே/334), குடமியன் (ஜே/337), நாவற்காடு (ஜே/338) ஆகிய பிரிவுகளுக்கான உணவுப் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்படுமென பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

## இவர்களுக்கு இன்னமும் சீருடைகள் கிட்டவில்லை

யாழ்ப்பாணம்,பெப்.14

குடாநாட்டுப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மத்திய பிரிவு, மேற்பிரிவு மாணவர்களுக்கான இலவச சீருடை இதுவரை அனுப்பப்படவில்லை என யாழ். வலயக் கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜனவரி மாதத்தில் ஆரம்பப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இலவச சீருடை அனுப்பப்பட்ட போதிலும் - மத்திய பிரிவு, மேற்பிரிவு மாணவர்களுக்கான சீருடைகள் விரைவில் அனுப்பப்படும் என்று அப்போது தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரைக்கும் அவை வந்துசேரவில்லை. (1-4)

## வெளிமாவட்டம் செல்வோருக்கு பயணப் பதிவு சனியன்று

யாழ்ப்பாணம்,பெப்.14

வெளிமாவட்டங்களுக்கு செல்ல முடியாதுள்ளவர்களுக்கு யாழ். செயலகம் கப்பல் வசதி செய்யவுள்ளது.

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மற்றும் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள், அரச பரீட்சைக்குச் செல்வோர் ஆகியோருக்கு பயண ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகவும் -

பயண ஏற்பாடு தேவைப்படுவோர் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் - அரச அதிபர் தெரிவித்தார். (அ-1)

## கொடிகாமத்தில் இளைஞன் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,பெப்.14

கொடிகாமம் பொலீஸ் நிலையத்திற்குப் பின்புறம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கச்சாய் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த காசிப்பிள்ளை வசந்தகுமார் (வயது - 18) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

சந்தைக்கு சென்றுகொண்டிருந்த இளைஞனை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த இனந்தெரியாதோர் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாக கூறப்படுகின்றது. (1-202)

## இளைஞர்கள் இருவர் நேற்றுச் சரண்

யாழ்ப்பாணம்,பெப்.14

கொலை அச்சுறுத்தல் காரணமாக இளைஞர்கள் இருவர் நேற்று யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர்.

கோப்பாய், மட்டுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் இருவரே சரணடைந்துள்ளனர்.

மேற்படி இளைஞர்கள் இருவரையும் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி தெரிவித்தார். (1-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோதல்களைத் தவிர்த்தால்...

(04ஆம் பக்கம் பார்க்க)

கடந்த இருபது வருடகால யுத்தத்தால் தமிழ் மக்களின் வாழ்க்கையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதேவேளை, அந்த யுத்தத்தில் அரசினால் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கவும் முடியவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் அலுவலர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டுவருவதற்குத் தற்போதைய அரசு தடையாக இருக்கப்போவதில்லை எனத் தெரிகிறது. அவ்வாறனதொரு தீர்வை எட்டுவதற்கு மோதல்களை ஏற்படுத்துவது இரு தரப்புகளுக்கும் கடினமான விருப்பு வெறுப்புகளை உருவாக்கும். அதைத் தவிர்ப்பதே இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அடித்தளமாக அமையும்.

ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தீர்வு ஒன்றையே அமெரிக்கா வலியுறுத்தி வருகின்றது.

எதிர்வரும் 22ஆம் திகதி போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி 5 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இந்த நிலையில், போர்நிறுத்த உடன்படிக்கையை முறிப்பதாக ஒரு தரப்போ அல்லது இரு தரப்போ அறிவிக்கும்வரை யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும். இதில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியவர்கள் இரு தரப்பினருமேயாவர்.

கடந்த 20 வருட கால யுத்தத்தால் தமிழ் மக்களின் வாழ்க்கையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதேபோல் 20 வருட யுத்தத்தில் அரசினால் புலிகளைத் தோற்கடிக்கவும் முடியவில்லை.

**வடக்கு – கிழக்குப் பிரிப்புக்கு பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும்**

வடக்கு - கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்ட விடயம் பேச்சுகளின் மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்பதே இணைத்தலைமை நாடுகளின் விருப்பமாகும். சுதந்திர ஊடக முறையானது ஒரு ஜனநாயகத்தின் ஒரு செயற்பாடு என்று அமெரிக்கா நம்புகிறது.

இந்த நிலையில், ஊடகவிலாளர்கள் அவர்களின் தொழில்களை மேற்கொள்ளும்போது ஏற்படும் பிரச்சினைகளையும் அச்சுறுத்தல்களையும் அமெரிக்கா கண்டிக்கிறது. இலங்கையின் ஊடக சுதந்திரம் குறித்து அமெரிக்கா கண்காணித்து வருகின்றது.

**அனைத்து மக்களின் பாதுகாப்பையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும்**

இதேவேளை, அரசு நீதிநியாயத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அனைத்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும். பாதுகாப்பு தரப்பினரின் நன்நடத்தையினை உறுதிசெய்ய வேண்டும்.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வருகின்ற கொலைகள், ஆட்கடத்தல்கள் போன்ற சம்பவங்களை அமெரிக்கா அவதானித்து வருகின்றது.

பயங்கரவாதமற்ற செயற்பாடுகளை விடுதலைப் புலிகள் சொல்லிலும் செயலிலும் காட்டும் பட்சத்தில் அந்த அமைப்பின் கொள்கையில் மாற்றம் பற்றி அமெரிக்கா சிந்திக்க முடியும் - என்றார்.

## சந்தர்ப்பவாத அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சியாகவே இருக்கிறோம்.

இதுவரை காலமும் தமிழ் மக்களின் உரிமைகளை உதாசீனப்படுத்திப் பேசியவர்களுள் முன்னணியில் இருந்தவர்கள் மங்கள சமரவீரவும், சிறிபதி சூரியாராச்சியும். இவர்களுடன் ஜே.வி.பியினரும் சேர்ந்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கான பேச்சுகள் நடைபெறுகின்றன என்று கூறப்படுகின்றது.

மங்கள அணியினர், ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பியுடன் இணைந்து எதிர்க்கூட்டணி ஒன்றை ஏற்படுத்தவும் - இந்த அணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இணைத்துக் கொள்ளவும் முயற்சிப்பதாகத் தெரியவந்துள்ளது.

ஆனால், இதுவரை உத்தியோக பூர்வமான அழைப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. அப்படியே அழைப்புக் கிடைத்தாலும் சந்தர்ப்பவாதக் கூட்டுக்கு நாம் முண்டு கொடுக்கப்போவதில்லை - எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

## ஈழத்தமிழர் பிரச்சினையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரை தமிழகத் திரையுலகம் வரவேற்றுக் கலந்துரையாடியது.

இவ்வரவேற்பு விழாவும் சந்திப்பும் அண்மையில் நடிகர் சங்கப்பணிமனையில் இடம்பெற்றது. இவ்விழா தயாரிப்பாளர் சங்கத் தலைவர் இராம நாராயணன் தலைமையில் நடைபெற்றது.

இவ்வரவேற்பு நிகழ்வில் நடிகர் சங்கத்தலைவர் நடிகர் சரத்குமார், பழம்பெரும் நடிகை மனோரமா, இயக்குநர் எஸ். ஏ.சந்திரசேகரன், இயக்குநர் ஆர். சுந்தர்ராஜன், நடிகர் விஜயகுமார், நடிகரும் அ.தி.மு.கவைச் சேர்ந்த அரசியல்வாதியுமான எஸ். எஸ். சந்திரன் மற்றும் இளம் நடிகர் அப்பாஸ் உட்பட இன்னும் பல திரையுலக பிரபலங்கள் கலந்துகொண்டனர்.

ஈழத்தில் தமிழ் மக்கள் படும் துன்பங்களை தமிழ்த் திரைத்துறையினருக்கு எடுத்துச் சொல்லும் ஒரு வாய்ப்பாக இவ்விழா பயன்பட்டது.

**மனோரமா சொன்னது**

நீண்டநேரம் நாடாளுமன்ற உறுப்பினர்களோடு உரையாடிய திரையுலகத்தினர் அனைவரும் தங்களின் ஆதரவினை ஈழமக்களுக்கு தெரிவித்துக் கொண்டனர். குறிப்பாக நடிகை மனோரமா, ''இவ்வளவு இன்னல்களையும், துயரங்களையும் அங்கு எமது தமிழ் மக்கள் அனுபவிப்பது பற்றி எங்களுக்கு எதுவுமே தெரியவரவில்லை. நிச்சயமாக தமிழ் மக்களின் போராட்டம் வெற்றிபெற வேண்டும்'' என்று கவிஞர் காசி ஆனந்தனிடம் கூறினார்.

## கற்றல் செயற்பாடுகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிரட்டல் விடுத்து மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்ப முயற்சிக்கின்றதே தவிர மாணவர்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கவில்லை.

மாணவர்கள் அனைவரும் சற்றுப்பொறுமை காத்து அவர்களை பாடசாலைகளுக்குச் சென்று கற்றலைத் தொடர முயற்சிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

கடத்தப்பட்ட மாணவர்கள் விடுவிக்கப்பட்டு மாணவர்களின் பிரச்சினைகளை முடிவுக்குக்கொண்டுவர குடாநாட்டில் உள்ள ஏனைய தரப்பினரும் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டுமென வேண்டுகின்றோம் - என்று கேட்கப்பட்டுள்ளது. (அ-1)

---

### Mrs. DEVI SHANMUGALINGAM

Beloved wife of K.Shanmugalingam (Former Deputy Secretary, Treasury) loving mother of Dr.Shanmugadeva, Geetha, Arudselvi, Vythehi, loving mother in law of Vallabi (U.K), Dr. Kumaresan (U.S.A), Velnambi (U.S.A), beloved sister of Mrs. Arunthaathi Shanmuganathan (U.S.A) and Dr. Arulneri (Kerala), precious grand mother of Mithra, Maya and Naren expired, Cortege leaves Residence No. 4, Rama krishna Avenue, Wellawata for cremation at General Cemetery, Kanatte at 5p.m. on Thursday 15 th February.

**Family Members**

---

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புவனேஸ்வரி அரியராசா

**(ஆசிரியர், இ.த.க.பாடசாலை, தாவடி)**

மலர்வு 30.09.1941 உதிர்வு 14.02.1991

இடையிலே விடைபெற்று எங்கு சென்றாய்
இதயத்தை ஈட்டியால் ஏன் கொன்றாய்
விடை இன்றி திகைத்து இடர்பட்டு நாமோ
விழுந்தோம், விம்மினோம், விழிநீர்போமோ.

பிரிவால் துயருறும்:
கணவர், மகன் (லண்டன்), உறவினர்.

தாவடி தெற்கு, கொக்குவில். (57987)

---

## 31ஆம் நாள் நினைவலைகள்



### சீனியர் தனபாலசிங்கம்

**(ஒலி, ஒளி அமைப்பு உரிமையாளர்)**

மண்நோக்கி 28 ★ 04 ★ 1951 விண் நோக்கி 15 ★ 01 ★ 2007

திதி: 14.02.2007

பாசம் மிக்க அப்பாவே!
பாரினிற்கு உனது தொண்டு
போதுமென்று நினைத்தாயோ!
முருகா என தினம் அழைத்தாய்
அவன் பாதம்சென்றிடுவாய் அப்பா!

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (57995)

**சிவகுமார் (மகன்).**

---

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை முருகேசு

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

நவிண்டிலைப் பிறப்பிடமாகவும் கரணவாய் வடக்கு சக்காலாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை முருகேசு12.02.2007 அன்று தனது இல்லத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) சகோதரனும் பரராஜசிங்கம் (ஸ்ரடி சேக்கிள் நிர்வாகி), சுசிலா தேவி, சிவகுமார் (பொறியியலாளர், சிங்கப்பூர்), கமலாதேவி (திருகோணமலை), மஞ்சுளாதேவி (ஆஸ்திரேலியா), ரவிந்திரன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா) காலஞ்சென்ற விமலாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜயலட்சுமி, தங்கவேலாயுதம் (அமரர்), லோகநாயகி (சிங்கப்பூர்), கணேசமூர்த்தி (மாகாண கல்வித் திணைக்களம், திருகோணமலை), வசந்தநாதன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), அனுஷா (வைத்திய கலாநிதி, ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும் நிலானி, பாலேந்திரன், சுசிந்திரன், சுஜித்தா, அனுஷா, சிறிராம், சிந்துஜா, மீரா, ரவின், சிந்துஷா, ஜெயராணி, சிவாந்தி, பிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஜீனோஷனின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (13.02.2007) அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.பரராசசிங்கம் (மகன் - ஸ்ரடி சேக்கிள்).

### செல்லத்துரை குணரத்தினம்

**(சின்னமணி - சாரதி)**



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை குணரத்தினம் 12.02.2007 திங்கள் அன்று காலமானார்.

அன்னார் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் சசிக்குமார் (வவுனியா), றெஜிக்குமார், உமேஸ்குமார், குணறோஜன் (மாணவன், யா/யூனியன் கல்லூரி 2007 கலைப்பிரிவு) ஆகியோரின் தந்தையும் கேதீஸ்வரி (வவுனியா), யசோதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தனுஜன், தர்சன், சிந்துஜன், சாரங்கன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (14.02.2007) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காடாகடம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு (தோப்பு),
சுன்னாகம். (58206)

தகவல்:
குடும்பத்தினர்.

---


### The Jaffna Education Centre

**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**

நாதன் திரையரங்கு முன்பாக மேல்மாடியில் (வலது பக்கம்)

**Spoken English With Grammar, சிங்களம், Short Hand Typing**

ஆகிய பாடங்கள் இருமொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 14.02.2007

கடைசியில் 'சான்றிதழ்' வழங்கப்படும்.

இயக்குநர் இ.லோகநாயகி.

### VACANCY

| | |
|---|---|
| Computer Instructor | Male/Female |
| Trainee Typist | Male/Female |

The applicants are required to sent their Bio Data on or before 25.02.2007 the following address.

**The Director,
Institute of Micro Systems,
Market Lane, Manipay.**

### IMS
**Institute of Micro Systems**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Certificate In Ms-Office
- Diploma In Computer Studies
- Diploma In Computer Programming
- Buissiness Desk Top Publishing
- Computer Hardware

**IMS Market Lane, Manipay.**

### இலவசக்கணனிப்பயிற்சி

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனம் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.

MCS Supported By UNDP/JRRP

விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 17-02-2007 முன் நேரில்

334, [illegible]


---

## மரண அறிவித்தல்கள்

### விசுவலிங்கம் அம்பலவாணர்

(Retired Vice Principal, அரியாலை சிறிபார்வதி வித்தியாசாலை)

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட விசுவலிங்கம் அம்பலவாணர் 11.02.2007 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம்-இராஜேஸ்வரிஅம்மா தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவஞானேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை-சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும் டாக்டர் கௌதமி (U.S.A.), தேவந்தி, சுமந்திரன் (ஆஸ்திரேலியா), வருணி (ஆஸ்திரேலியா), மைதிலி(நோர்வே), துருவாசகன் (Seychelles) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலகுமாரன் (U.S.A.), சற்குமாரன் (ஆஸ்திரேலியா), ரவீந்திரா, சியாமளா (Seychelles) ஆகியோரின் அன்பு மாமனும் சரவணன், சக்தி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற ஆலாலசுந்தரம் மற்றும் இரத்தினசுந்தரம், இலங்கேஸ்வரி, யோகேஸ்வரி, சுவர்னேஸ்வரி (சிங்கப்பூர்), மகேஸ்வரி (கனடா), மகேஸ்வரன்(கனடா), டாக்டர் உருத்திரேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் துரைச்சாமி, காலஞ்சென்ற தியாகராஜா, இராமநாதன்(சிங்கப்பூர்), மகேசன் (கனடா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(15.02.2007)வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு A.S.Ramons மலர்ச் சாலையில் வைக்கப்பட்டு பி.ப. 3 மணிக்கு தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

59, 5/2, W.A. Silva Mawattha,
Colombo -6
Tel.: 0112 507426 (57958)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

### முத்தையா ஜெகராசா



தாவடி தெற்கு, தாவடியைப் பிறப்பிடமாகவும் இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா ஜெகராசா கடந்த 06.02.2007 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் அமரர்களான முத்தையா-பூர்ணம் தம்பதியரின் அன்பு மகனும் அமரர் நாகராசா - மற்றும் தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் சத்தியராணியின் அன்புக்கணவரும் அமரர் சண்முகராசா, யோகராசா (ஜேர்மனி), செல்வராசா (இத்தாலி), கதிர்காமநாதன் (இத்தாலி), அமரர்களான சிவராசா, புஸ்பராணி மற்றும் புஸ்பலீலா, புஸ்பரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நடராசா, யோகராசா, விஜயகுலசூரியன், கலாமதி, சுவாராணி, சாந்தி, ஞானசௌந்தரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.02.2007) புதன்கிழமை அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு காலை 9.30 - 12.30 மணிவரை லண்டன் ரவி தேசிய மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் City of London மயானத்தில் பகல் ஒரு மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
தொ.பே : 00442085549045,
கை.தொ.பே: 00447985108041. (57944)

தகவல்:
Dr.நா.சிவபாலன் (மைத்துனர்).

### முத்தையா சுவாமிநாதன் (ஆசாரி)



முனீஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட நாதன் தச்சுத்தொழிற்சாலையின் உரிமையாளராகிய முத்தையா சுவாமிநாதன் ஆசாரி 13.02.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - அவ்வையம்மா தம்பதியரின் மூத்தமகனும், அமுதவல்லியின் (தையல்நாயகி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சுலோன்மணி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற காளிதாஸின் சகோதரனும், காலஞ்சென்ற குருநாதன் மற்றும் யோகநாதன் (பிரான்ஸ்), யோகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற தவமணி, தங்கராணி, கலா (பிரான்ஸ்), பரராஜசிங்கம் (லண்டன்) ஆகியோரின் மாமனும் காயத்திரி, முரளீதரன், கண்ணன், பிரசாத், வினோத், சிவகாமி, அபிராமி, ராவண்யா, செந்தூரன் ஆகியோரின் பேரனும் சுதர்சனின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2007) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

52/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (58262)

தகவல்:
தையல்நாயகி (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.